Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.191/2021** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW8** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father/Husband Name | : | சந்திரன் |
| Village | : | பனங்காய்கூட்டம், உச்சிபுளி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கார் டிரைவர் |
| Religion | : | |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.09.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் உச்சிப்புளி பனங்காய்கூட்டம் கிராமத்தில் வசித்து வருகிறேன். உச்சிபுளியில் சொந்தமாக கார் ஓட்டி தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சீனிவாசனை தெரியும். கடந்த 10.01.2020ம் தேதி காலை 06.00 மணிக்கு மேல் நாகாச்சியிலிருந்து உச்சிப்புளிக்கு வந்து கொண்டிருந்தபோது புயல் காப்பகம் அருகில் உச்சிபுளி காவல் ஆய்வாளர், இரண்டு ஏட்டையாக்கள் அங்கு எழுதிக்கொண்டிருந்தார்கள். நான் எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு போனேன். போலிசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகசரில் நானும், மணிகண்டனும் கையெழுத்து போட்டோம். பார்வைமகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் **அ.சா.ஆ.2**. சம்பவ இடத்தில் இரத்தம்படிந்த தார்துகள்கள் கொஞ்சம், இரத்தம் படியாத தார்துகள்கள் கொஞ்சம்

எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், மணிகண்டனும் கையெழுத்து போட்டோம். அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சி **அ.சா.ஆ.3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 10.01.2020ம் தேதி கையெழுத்து போட்டு விசாரித்தார்கள், அதற்கு பின்பு விசாரிக்கவில்லை. நான் சொந்தமாக கார் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் போலிசார் அனுசரணை இல்லாமல் தொழில் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் நடைபயிற்சிக்காக சென்று கொண்டிருந்தபோது போலிசார் புயல் காப்பகம் பக்கத்தில் படம் மற்றும் மகசர் வரைந்து கொண்டிருந்தார்கள் என நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அங்கு செல்லும்போது காலை 06.00 மணியிருக்கும். நான் அங்கு அரை மணிநேரம் இருந்தேன். நான் அங்கு இருக்கும்போது இரத்தம் உறைந்தநிலையில் ரோட்டில் தேய்த்தார்போல் இருந்தது. உச்சிபுளி ரோடு என்பது தேசிய நெடுஞ்சாலை. அந்த சாலை மிக அதிக போக்குவரத்து இருக்கக்கூடிய சாலை என்றால் சரிதான். இரத்தம்படிந்த மண்ணை தவிர வேறு எதையும் போலிசார் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் முதல் நாளே பைக்கை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். இறந்துபோன சீனிவாசன் ஆக்சிடென்ட் ஆகி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் டிரைவராக இருப்பதால் போலிசாரின் இருப்பு சாட்சி என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் சொந்தக்காரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எதிரியும் சொந்தக்காரர். நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் எதையும் பார்க்கவில்லை என்றும், நான் கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

Calendar .. .. }
Miscellaneous .. .. }
Preliminary Register .. .. } **S.C.191/2021**
Sessions .. .. }
} Prosecution – **PW7**
Deposition of witness for } Defence –
} Court –

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பையா |
| Father/Husband Name | : | ராமு |
| Village | : | சத்யா நகர், உச்சிப்புளி |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ஆட்டோ டிரைவர் |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.09.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் உச்சிப்புளி சத்யா நகரில் வசித்து வருகிறேன். உச்சிபுளியில் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். துத்திவலசையை சேர்ந்த அ.சா.1 சதீஸ்குமார் மற்றும் இறந்துபோன அ.சா.1ன் அண்ணன் சீனிவாசனை தெரியும். சீனிவாசன் இறப்பதற்கு முன்பு உச்சிபுளியில் ஆட்டோ ஓட்டி வந்தார். கடந்த 07.01.2020ம் தேதி மாலை 04.30 மணியளவில்நான் உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது சீனிவாசனுக்கும் ஆஜர் எதிரிக்கும் சண்டை நடந்தது. எதிரியும் உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோடிரைவராக தொழில் செய்து வந்தார். தற்போதும் செய்து

வருகிறார். ஆட்டோ சவாரி சம்மந்தமாக எதிரிக்கும் இறந்துபோன சீனிவாசனுக்கும் பிரச்சனை ஏற்பட்டு சண்டை ஏற்பட்டது. எதிரி சண்டையின்போது இறந்துபோன சீனிவாசனின் தாடையில், முகத்திலும் ஆட்டோ சாவியை வைத்து கீறிவிட்டார். அப்போது நானும், பாதேஸ்வரனும் அவர்கள் சண்டையை விலக்கி விட்டோம். அதோடு நான் சவாரிக்கு சென்றுவிட்டேன். அதன் பிறகு இரண்டு நாட்கள் கழித்து இறந்த சீனிவாசனும், அவரது தம்பி சதீஸ்குமாரும் பைக்கில் செல்லும்போது எதிரி பவித்ரன் ஆட்டோவில் வந்து புயல் காப்பகம் உள்ள பைபாஸ் ரோட்டில் சீனிவாசன் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டதாக கேள்விபட்டேன். அதன் பிறகு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சீனிவாசன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை அழைத்ததின்பேரில் சென்றேன், அங்கு வைத்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிப்பதற்கு முன்பு வரை நான் விலக்கிவிட்ட சம்பவத்தை யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். போலிசாரிடம் தான் முதன்முதலில் சொன்னேன். உச்சிப்புளி ஆட்டோ ஸ்டாண்டில் இருந்து 50 அடி துாரத்தில்தான் உச்சிப்புளி காவல் நிலையம் என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டிற்கு நேர் எதிர்த்தார் போல் உச்சிபுளி அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டிற்கு இருபக்கத்திலும் எதிர்புறத்திலும் தனியார் மருத்துவர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். சீனிவாசனுக்கு காயம்பட்டதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் சீனிவாசனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றுதான் சொன்னேன் என்றால் சரியல்ல. உச்சிபுளி ஆட்டோ ஸ்டாண்டு அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியும், சீனிவாசனும் ஆட்டோ ஸ்டாண்டு அருகே சண்டைபோட்டுகொண்டது சம்மந்தமாக, எதிரி குத்தியது சம்மந்தமாகவோ, போலிசிடமோ, சீனிவாசனின் உறவினர்களிடமோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சீனிவாசனுக்கு மருத்துவ சிகிச்சை கொடுப்பதற்கு எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும்போது TN 65 S 6250 என்ற எண் உள்ள ஆட்டோவை ஓட்டினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாதேஸ்வரன் ஓட்டிய ஆட்டோவின் எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியும், சீனிவாசனும் ஆட்டோ

ஸ்டாண்டில் சண்டைபோடும்போது ஆட்டோ ஓட்டுநர்கள் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் பாதி பேர் பார்த்தார்கள் அவர்களுக்கு தெரியும். ஆட்டோ ஸ்டாண்டிற்கு முன்பக்கமும், பின்பக்கமும் பெரிய காம்ப்ளக்ஸ் உள்ளது என்றால் சரிதான். அங்கு சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். சீனிவாசன் எனக்கு என்ன முறை வேண்டும் என்றால் பேரன் முறை. நான் உச்சிபுளி ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டவில்லை என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும் இந்த வழக்கிற்கு ஒரு முன்விரோதம் வேண்டும் என்பதற்காக ஒரு வருடம் கழித்துத்தான் என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் என் பேரன் என்பதால் அவர் குடும்பத்தார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.191/2021** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW6** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சக்தி சங்கர் |
| Father/Husband Name | : | முருகேசன் |
| Village | : | துத்திவலசை |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | ஆட்டோ டிரைவர் |
| Religion | : | |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.09.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் துத்திவலசை கிராமத்தில் வசித்து வருகிறேன். உச்சிபுளியில் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சீனிவாசனை தெரியும். அவர் பனங்கான்கூட்டம் கிராமத்தை சேர்ந்தவர். அவர் தம்பி சதீஸ்குமாரை தெரியும். உச்சிப்புளி தென்கிழக்கு மறவர் சங்கத்தில் ஆம்புலன்ஸ் வைத்துள்ளார்கள். ஆம்புலன்ஸ் டிரைவர் இல்லாத நேரத்தில் என்னை கூப்பிடுவார்கள் நான் போவேன். கடந்த 09.01.2020ம் தேதி மாலை 06.00 – 06.20 மணியளவில் தென்கிழக்கு மறவர் சங்க உறுப்பினர்களிடமிருந்து எனக்கு போன் வந்தது. ஒரு விபத்து

ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த விபத்தில் காயம்பட்ட நபரை நடுவலகை அருகே உள்ள புயல்காப்பகத்திலிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூப்பிட்டார்கள். நான் எனக்கு ஏற்கனவே தெரிந்த சீனிவாசனை ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு இராமநாதபுரம் ஆசிக் மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தேன். அப்போது அவருடன் அவரது தம்பி சதீஸ்குமார் ஆம்புலன்ஸில் வந்தான். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 09.01.2020ம் தேதி இரவு காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மறவர் சங்கத்திலிருந்து ஒரு நபருக்கு விபத்து ஏற்பட்டுள்ளது, அந்த நபரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லவேண்டும் என கூப்பிட்டதால் சென்றேன் என்றால் சரிதான். மறவர் சங்கத்தில் இருந்து யார் பேசியது, எந்த நம்பரில் இருந்து பேசியது தெரியாது என்றால் சரிதான். எங்கள் ஆட்டோ ஸ்டாண்டு எங்கு உள்ளது என்றால் உச்சிப்புளி பேருந்துநிறுத்தம் அருகில் உள்ளது. சீனிவாசன் காயம்பட்டுகிடந்த இடத்தில் கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். நான் அங்கு சென்றபோது சீனிவாசன் மட்டும்தான் காயம்பட்டு கிடந்தார் என்றால் சரிதான். கொஞ்சநேரத்தில் போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசார் வந்துதான் ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு போக சொன்னார்கள் என்றால் சரிதான். அதை தவிர நான் அங்கு வேறு எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் வாகனம் தனிநபருக்கு பாத்தியப்பட்டது அல்ல, மறவர் சங்கத்திற்கு பாத்தியப்பட்டது. சீனிவாசன் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல, எனக்கு பழக்கம். நான் ஆம்புலன்ஸ் நேராக ஆசிக் மருத்துவமனைக்கு வந்து சேரும்போது மாலை 06.00 – 06.30 இருக்கும். மருத்துவமனையில் சேர்த்துவிட்டு நான் உடனே சென்று விட்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு சென்று சீனிவாசனை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.